4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

MCOP No. 70 /2022 நாள்: 03.01.2025 ம.சா.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | தொழில் | : | கணக்கர் |
| த/பெ | : | நடராஜன் | கிராமம் | : | உடுமலைப்பேட்டை |
| வயது | : | 38 | தாலுகா | : | உடுமலைப்பேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் தற்போது உடுமலைப்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலத்தில் கணக்கராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெற்று ஆவணங்களில் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். தளி காவல் நிலைய குற்ற எண்.267/2018 வழக்கில் சம்பந்தப்பட்ட வாகன எண். TN 78 W 7956 என்ற வாகனம் எங்கள் அலுவலகத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அந்த வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை கொண்டு வந்துள்ளேன். அது சாட்சி சான்றாவணம் 1. (ஆவணம் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

குறுக்கு விசாரணை

சா.சா.ஆ.1 ல் வாகனத்தின் பதிவு எண்ணில் திருத்தம் காணப்படுவது தொடர்பாக அதில் சுருக்கொப்பம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு அனுமதி கடிதம் வட்டார போக்குவரத்து அலுவலர் கொடுத்துள்ளார். வாகனத்தை முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தான் ஆய்வு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. மோட்டார் வாகன ஆய்வாளர் எந்த வாகனத்தை ஆய்வு செய்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பொதுவாக மோட்டார் வாகன ஆய்வறிக்கை இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். பதிவேற்றம் செய்த பிறகு அதில் ஏதேனும் திருத்தம் செய்ய வேண்டும் என்றால்

வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அனுமதி பெற்ற பிறகு தான் திருத்தம் செய்ய முடியும் என்றால் சரிதான். சா.சா.ஆ.1ல் உள்ள திருத்தம் பேனா வால் தான் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் எந்த தேதியில், யாரால் திருத்தம் செய்யப்பட்டது என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான். என்னுடைய கோப்பில் அது குறித்த கடிதமோ, குறிப்புகளோ இல்லை என்றால் சரிதான். மேற்படி திருத்தம் சம்பந்தமாக காவல் நிலையத்திற்கோ, காப்பீட்டு நிறுவத்திற்கோ தகவல் தெரிவித்ததாக எங்கள் அலுவலக கோப்பில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையோ, காவல் நிலைய அதிகாரி கொடுத்த கடிதமோ நான் கொண்டுவரவில்லை, அலுவலக கோப்பில் இருக்கலாம். காவல் நிலைய அலுவலர் அதிகார கொடுத்த கடிதத்தில் எந்த வாகனம் சம்பந்தப்பட்டுள்ளதாக காணப்படுகிறதோ, அதை தான் ஆய்வு செய்து பதிவு செய்வோம் என்றால் சரிதான். காவல் துறையினர் கொடுக்கும் ஆவணங்களை பார்த்துதான் ஆய்வு செய்து பதிவேற்றம் செய்வோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வாகனங்களின் காப்பீட்டு சான்றிதழை சரிபார்த்து ஆய்வு செய்யப்பட்டதா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. திருத்தம் செய்வதற்கு முன்பு TN 78 W 7056 என்று இருந்துள்ளது. அதன் பின்னர் TN 78 W 7956 என்று திருத்தப்பட்டுள்ளது. தட்டச்சு பிழையால் "0" என இருந்ததை "9" என திருத்தப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு காப்பீட்டு சான்று இல்லை. அந்த ஒட்டுநருக்கு ஒட்டுநர் உரிமமும் கிடையாது என்றால் சரிதான். நான் மேற்படி ஆய்வின் போது அந்த அலுவலகத்தில் பணியில் இல்லை என்றால் சரிதான். மேற்படி திருத்தம் செய்ததற்கான காரணம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்போது தட்டச்சு பிழையால் திருத்தம் செய்யப்பட்டதாக நான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

C RAJALINGOM
Digitally signed by C RAJALINGOM
Date: 2025.01.03 16:50:32 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.